5. **தலைப்பு 3 – விசேட செயற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்)**

---

**5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவராமை**

---

செயலகத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் மேலுமொரு பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**5.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

---

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

**5.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்பது செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,000,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எழுபத்திரண்டு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்தச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 5.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அலுவலகத்தினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5.6 இணங்காமை

---

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 225(1) | 1,371,144 | முன்னர் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டின் நிழற்படப்பிரதியைப் பெற்று தொகையைக் குறிப்பிட்டு அதனை உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்தல் |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | - | பிரயாணம் தொடர்பான பொழிப்பின் மூலப்பிரதி மற்றும் குழாம் வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | - | செயற்திட்டத்தின் மூன்று உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 480,000 | வாகனத்தை வாடகைக்கு பெறும் போது ஒரு வாகனத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 80,000 வீதம் 06 வாகனங்களுக்காக வாடகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 5.7 செயலாற்றல்

### பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

அலுவலகம் தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளுக்குப் புறம்பாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திரண்ட நிதியத்திலிருந்து விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வைக்கான சட்டகம் என்ற பெயரிலான செயற்திட்டத்தின் ரூபா 85,000,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 200,000 குறிப்பிட்டதொரு சங்கத்தின் செயலமர்வை நடாத்துவதற்காக கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) குறித்த செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக கட்டிடத்தின் மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,515,652 செலவிடப்பட்டிருந்தது.

## 5.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையினதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(ஆ) விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வைக்கான சட்டகம் என்ற பெயரிலான செயற்திட்டத்தின் பதவியணியினர் 39 ஆக இருந்த போதிலும், 55 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. (44 மடிக் கணனிகள், 06 டெப், 05 கணனிகள்)

(ஆ) சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திலிருந்து வாகன வசதி வழங்கப்பட்டிருந்தது.

## 5.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அலங்கார வடிவமைப்புக் கணனியொன்று ரூபா 217,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பொருட்டு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.1.1 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 வழிகாட்டியின் பிரகாரம் விலை ஒப்பீட்டு முறை பின்பற்றப்படாமல் ஒரு நிறுவனத்தின் கூறு விலையின் அடிப்படையில் மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு மாநாடொன்றை நடாத்தவதற்கு ரூபா 373,000 தேசிய நுகர்வோர் நலன்புரி கொள்கைக்காக இணையதளமொன்றை வடிவமைப்பதற்கு ரூபா 250,000 எனச் செலவிடப்பட்டிருந்தது.

(iii) விலை ஒப்பீட்டு முறை பின்பற்றப்படாது ஒரு நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கூறு விலையின் அடிப்படையில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 579,499 தொகையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயலாளரின் அங்கீகாரமின்றி வாகனத்திற்கு உரித்தற்ற 04 உத்தியோகத்தர்களுக்கு 04 வாகனங்கள் வாடகைக்குப் பெறப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

(ii) செயலாளரின் அங்கீகாரமின்றி Scival & Scopus (தகவல் பதியும் இணையதளம்) வசதியொன்று 06 மாத காலத்திற்காக ரூபா 3,392,103 கொடப்பனவு செய்யப்பட்டு வாடகைக்கு பெறப்பட்டிருந்தது.

## 5.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2015 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 620,750 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட பவுசர் இயந்திரம் 2014 செப்தெம்பர் மாதமளவிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு 2014 ஆகஸ்ட் மாதத்தின்போது செயற்திட்டக் கட்டிடத்திற்கு வயர்களைப் பொருத்துவதற்கு ரூபா 889,675 வைபை (WiFi) வசதியை ஸ்தாபிப்பதற்கு ரூபா 1,661,453 என ரூபா 2,551,128 பழுதுபார்த்தலுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) சுகாதார, கமத்தொழில் மற்றும் கைத்தொழில்களோடிணைந்த உயிரியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் நோக்கத்துடன் செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்தது. அதில் பங்குபற்றிய நபர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அச் செயலமர்வில் 300 பேர் பங்குற்றுவதற்காக ரூபா 1,460,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,640,668 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செயலமர்வில் பங்குபற்றிய ஒருவரின் செலவினம் ரூபா 5,469 ஆகியது.

## 5.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 06 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 26 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 112 | 102 | 10 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 140 | 140 | - |
| | மொத்தம் | 307 | 275 | 32 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

செயற்திட்டத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும்போது சேவையிலிருந்து இராஜினாமாச் செய்த இரண்டு உத்தியோகத்தர்கள் அவர்கள் வகித்த பதவியை விட உயர்பதவிகளில் உரிய முறைமையினைப் பின்பற்றாது சேர்க்கப்பட்டிருந்தனர்.